மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் புதிதாக அமைக்கின்ற சாத்தியக்கூறு இல்லை.

திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த உரிகம் பகுதியானது அடர்ந்த அஞ்ஜெட்டி காட்டினுடைய நடு மத்தி மையம். மையமான பகுதி. அங்கே நிறைய மலைவாழ் மக்கள் எல்லாம் இருக்கிற காரணத்தினாலே அந்தப் பகுதியிலே ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தையோ அல்லது துணை சுகாதார நிலையத்தையோ அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே அந்த ஒன்றியத்திலே நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. மக்கள் தொகை அடிப்படையிலே அது போதுமானதாக இருக்கிறது என்றுதான் நான் இல்லை என்று சொன்னேன். துணை சுகாதார நிலையம் இருக்கிறதா இல்லையா என்று எனக்குத் தெரியவில்லை. எனவே, அதைப்பற்றி அரசு தனியாக ஆய்வு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கா. பூ. முனுசாமி.

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் இந்த நிதியாண்டில் வேறு எந்தப் பகுதியிலேயாவது புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதைப்பற்றி ஐந்தாம் தேதி வருகிற டிமாண்டிலே விளக்கமாகச் சொல்லுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 164, திரு. கி. தருமலிங்கம், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்.

164—

ஆசனாம்பட்டு ஏரியைப் புதுப்பித்தல்

***21512**—திரு. கி. தருமலிங்கம் :

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1995 மார்ச் 30]

அணைக்கட்டு தொகுதி, ஜவ்வாது மலைப்பகுதி, ஆசனாம்பட்டு கிராம ஏரி உடைந்துவிட்டதால் இந்த ஏரியை அரசு கட்டித் தருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆசனாம்பட்டு கிராம ஏரி காப்புக் காட்டில் அமைந்துள்ளது. பல வருடங்களுக்கு முன் உடைந்து விட்ட இந்த ஏரியினால் வனத்துறைக்கு எவ்வித பயனும் இல்லை. அதனால், இந்த ஏரியைக் கட்டித்தரும் யோசனை அரசுக்கு இல்லை.

முற்பகல் 10.10

திரு. கி. தருமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை நான் எழுப்பியதற்குக் காரணம், அந்தப் பகுதியிலுள்ள வன விலங்குகளுக்குக் குடி தண்ணீர் வசதி இல்லை என்பதால், அந்த ஏரியைக் கட்டுவதன் மூலம், அங்குள்ள வன விலங்குகளுக்குக் குடி தண்ணீர் வசதி கிடைக்கும் என்றுதான் நான் இந்தக் கேள்வியை எழுப்பினேன். தற்போது, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் இந்த ஆண்டு பிறந்த நாள் விழாவில், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் அவர்கள், நான் கேட்டிருந்த பகுதியிலே, அதே ஜவ்வாது மலைப் பகுதி உட்பட, தமிழக அரசின் அனைத்துக் காடுகளிலும் உள்ள வன விலங்குகளுக்காக 47 நீர்த் தொட்டிகளைக் கட்டி இருக்கிறார்கள். அந்த வகையில், அந்தப் பகுதியிலே நீர்த் தொட்டி கட்டிக் கொடுத்து, வன விலங்குகளுக்கெல்லாம் குடி தண்ணீர் வசதி செய்து கொடுத்த, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைச் சொல்லி, புரட்சி தலைவி அவர்களுடைய பிறந்த நாளில் இந்த நல்லதொரு திட்டம் தந்த இந்த நன்னாளில்—அதாவது, நான் கண்ட அரசியல் தலைவர்கள் பிறந்த நாளில் நிதியை மற்றும் பெற்றார்கள்; ஆனால், நமது அம்மாவினுடைய பிறந்த நாளில் வன விலங்குகளுக்கெல்லாம் குடி தண்ணீர் தந்து, இன்று நாட்டு மக்கள் எல்லாம் வாழ்த்துவதோடு மட்டுமல்லாமல், காட்டிலேயுள்ள அனைத்து விலங்குகளும், தண்ணீர் குடித்துக் கொண்டு, புரட்சி தலைவி அவர்கள் வாழ்க, வாழ்க என்று வாழ்த்தும் இந்த நன்னாளில்—இதுபோன்று ஒவ்வோராண்டும் நிறைவேற்றும் வகையில், அடுத்த ஆண்டும் 48 நீர்த் தொட்டிகளைக் கட்டிக் கொடுப்பாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்தின் வரலாற்றிலே,

நம்முடைய தமிழகத்தின் முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பிறந்த நாளில்தான், மனித நேயம் மிக்க முதலமைச்சர் என்ற அடிப்படையில், வன விலங்குகளுக்குக்கூட குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாத பகுதிகளைத் தேர்வு செய்து, அந்தப் பகுதிகளில் இன்றைக்குக் குடி தண்ணீரை வழங்குவதோடு மட்டுமல்லாமல், அந்தப் பணிகளைத் தொடர்ந்து, வறட்சிக் காலங்களிலேயும்கூட, தேவைக்கேற்ப தண்ணீரை வழங்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது. வருகிற நிதி ஆண்டிலே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பிறந்த நாளில், இதுபோன்ற நடவடிக்கை எல்லாப் பகுதிகளிலும் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கி. தருமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு மகிழ்ச்சியுடன் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 165, திரு. த. ரத்தினவேல், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்.

165—

வேங்கூருக்கு தனிப் பேருந்து இயக்குதல்

***36002**—திரு. த. ரத்தினவேல் :

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவெறும்பூர் தொகுதி, வேங்கூர் கிராமத்திற்கு திருச்சிராப்பள்ளி நகரத்திலிருந்து தனிப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடைமுறைப்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : திருச்சிராப்பள்ளியிருந்து வேங்கூர் கிராமத்திற்கு தனியாக பேருந்து இயக்கக் கூடிய அளவிற்கு பயணிகள் அங்கே இல்லை.